முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதியடிகளார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.11.2021, திங்கட்கிழமை

1. யுவராஜனே அரங்கா போற்றி
உயர் ஞானம் தந்தருளுகின்ற
அவதார தவசியே ஞான தேசிகா
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதன்னை
குறைவிலா பிலவ துலை திங்கள்
இருபான்நவ திகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 29ம் நாள், 15.11.2021 திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் அப்பூதியடிகளார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உயிர்காக்கும் மகா சக்தியான
ஞான தேசிகனின் அருட்தயவை
ஞாலமதில் மக்களெல்லாம் ஏற்று வர
4. வருகவே மக்களிடை பாதுகாப்பு
வளமும் நல்லபலமும் காணும்
முருகப்பெருமான் வழிபாடுதனை
முழுமைதரும் ஞானமாக ஏற்று
5. ஏற்று கலியுகமக்களெல்லாம்
இணங்கி நித்தம் செய்து வருக
பற்றுவைத்து அரங்கன் திருவடி
பணிந்து கலியுகமக்கள் வர
6. வருகவே ஞானிகள் வழிபாடு
வல்லமை கூடியே சக்தியாக
தரும குணம் தயவு குணமென
தரணியோர்க்கு தனித்துவம் கூடி
7. கூடியே அரங்கன் ஆசிபட
குவலயமெங்கும் ஞானவான்கள் படை
தடையற பெருகி ஞானத்தலைமை
தமிழகம் தொட்டுத் துவங்கியே
8. துவங்கியே உலகம் எங்கிலும்
தேசிகன் தொண்டர் படைவழி
அவனியில் ஞானவான்கள் ஆட்சி
ஆறுமுகனார் ஞான ஆட்சியாக
9. ஆட்சியாக அமைதல் கண்டு
அற்புதம் தனை உலகம் அடையும்
மாட்சிமைபட சன்மார்க்கம் எனும்
மகத்துவம் தனை வரவேற்று

10. ஏற்றுமே உயிர்கொலை நீக்கி
எல்லா மக்களும் தயவுபட
ஆற்றல் கூட அரங்கமகானிடம்
அருள் ஞான தீட்சை அடைந்து
11. அடைந்துமே செபதப முறைகள்
அனுதினம் பூசையாகச் செய்து
தடையற ஞானிகளாகி வர
தரணியே ஞானவான் தலைமைக்கு வரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–